**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

### தென்னாப்பிரிக்காவில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் இறுதி நாளில்

# சீன அதிபர் ஜி ஜின்பிங் பிரதமர் மோடி சந்திப்பு

**● ஜோகன்னஸ்பர்க்**

பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் இறுதி நாளான நேற்று சீன அதிபர் ஜி ஜின்பிங்கை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

கடந்த 2020-ம் ஆண்டில் இந்தியாவின் லடாக் பகுதியில் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய, சீன வீரர்களிடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டது. இதன் காரணமாக இரு நாடுகள் இடையே போர் பதற்றம் எழுந்தது. ராணுவ, ராஜ்ஜிய ரீதியில் நடைபெற்ற பல்வேறு சுற்று பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் தற்போது பதற்றம் தணிந்திருக்கிறது. எனினும் இரு நாடுகள் இடையிலான எல்லைப் பிரச்சினை இப்போதும் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து வருகிறது.

இந்த சூழலில் கடந்த ஆண்டு இந்தோனேசியாவின் பாலி தீவில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் சந்தித்துப் பேசினர். பாலியில் இரு தலைவர்களும் அதிகாரபூர்வமாக சந்தித்துப் பேசியதை கடந்த ஜூலையில் மத்திய வெளியுறவு அமைச்சகம் உறுதி செய்தது.

இந்த சூழலில் தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் பிரிக்ஸ் உச்சி மாநாடு கடந்த 22-ம் தேதி தொடங்கியது. இதில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் பங்கேற்றனர். மாநாட்டின் இறுதி நாளான நேற்று இரு



**↑ தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாடு நேற்று நிறைவு பெற்றது. இறுதி நாளில் தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ரமபோசா, பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா ட சில்வா, சீன அதிபர் ஜி ஜின்பிங், பிரதமர் நரேந்திர மோடி பரஸ்பரம் கைகுலுக்கி வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.** படம்: ஏஎப்பி

தலைவர்களும் தனியாக சந்தித்து பேசினர்.

இதுகுறித்து இந்திய வெளியுறவுத் துறை செயலர் வினய் குவாத்ரா கூறும்போது, "இந்திய, சீன எல்லையில் அமைதியை நிலைநாட்ட வேண்டும். அப்போதுதான் இருநாட்டு உறவு சீரடையும் என்று சீன அதிபர் ஜி ஜின்பிங்கிடம் பிரதமர் மோடி வலியுறுத்தினார்" என்று தெரிவித்தார். மாநாட்டின் இறுதியில் பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது பிரதமர் மோடியும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் கைகுலுக்கி பரஸ்பரம் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர். இருவரும் அதிகாரப்பூர்வமாக சந்தித்துப் பேசினார்களா என்பதை இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சகங்களும் உறுதி செய்யவில்லை. எனினும் மோடியும் ஜி ஜின்பிங்கும் எல்லைப் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

**6 புதிய நாடுகள்**

பிரிக்ஸ் அமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய 5 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பில் இணைய சுமார் 60-க்கும் மேற்பட்ட நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. சுமார் 30-க்கும் மேற்பட்ட நாடுகள் நேரடியாக விண்ணப்பம் செய்துள்ளன.

இதுதொடர்பாக பிரிக்ஸ் மாநாட்டில் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது. இதன்படி அர்ஜென்டினா, எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 6 நாடுகளை பிரிக்ஸ் அமைப்பில் இணைக்க முடிவு எடுக்கப்பட்டது. இந்த 6 நாடுகள் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளாக அங்கீகரிக்கப்பட உள்ளன.

இதுதொடர்பாக பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது: பிரிக்ஸ் அமைப்பை விரிவாக்கம் செய்ய இந்தியா முழு ஆதரவு அளிக்கும். இதன்மூலம் உலகளாவிய அளவில் புதிய ஒழுங்கை ஏற்படுத்த முடியும். கடந்த 20-ம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை செய்ய முடியும்.

பிரிக்ஸ் அமைப்பில் இணைய உள்ள 6 புதிய நாடுகளையும் வரவேற்கிறேன். இந்த நாடுகளின் தலைவர்கள், மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். பிரிக்ஸ் அமைப்பில் இணைய மேலும் பல்வேறு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. இந்த விவகாரத்தில் உறுப்பு நாடுகளிடையே கருத்தொற்றுமையை ஏற்படுத்த இந்தியா தொடர்ந்து முயற்சி செய்யும்.

சந்திரயான் -3 திட்டம் வெற்றி அடைந்ததற்கு உலக நாடுகள் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றன. இது இந்தியாவுக்கான வெற்றி மட்டுமல்ல. ஒட்டுமொத்த மனித குலத்தின் வெற்றி. அறிவியல் வளர்ச்சிக்கு கிடைத்த வெற்றி ஆகும். சந்திரயான் -3 வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்த உலக நாடுகளின் தலைவர்கள் உட்பட அனைவருக்கும் இந்தியாவின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக 'பிரிக்ஸ்- ஆப்பிரிக்கா' கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

இந்த மாநாட்டின் மூலம் ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். சர்வதேச அரங்கில் தெற்கு நாடுகளுக்கு ஆதரவாக இந்தியா குரல் கொடுத்து வருகிறது. ஒரு காலத்தில் தெற்கு நாடுகள் காலனி ஆதிக்கத்தின் பிடியில் இருந்தன.

இந்திய தேசத் தந்தை மகாத்மா காந்தி, ஆப்பிரிக்க மண்ணில் அகிம்சை வழி போராட்டத்தை முன்னெடுத்து சென்றார். காந்தியின் கொள்கை, போதனைகளால் நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்கள் அவரவர் நாடுகளில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆப்பிரிக்க நாடுகளுடனான நல்லுறவுக்கு இந்தியா எப்போதும் முன்னுரிமை அளிக்கிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

EVA STALIN

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

### 69-வது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிப்பு

# சிறந்த தமிழ்ப் படமாக 'கடைசி விவசாயி' தேர்வு

**சிறந்த நடிகர் அல்லு அர்ஜுன், நடிகை ஆலியாபட், கிருத்தி சனோன்**

**புதுடெல்லி**

2021-ம் ஆண்டுக்கான 69-வது தேசிய திரைப்பட விருதுகள் டெல்லியில் நேற்று அறிவிக்கப்பட்டன. இயக்குநர் கேட்டன் மேத்தா தலைமையிலான 11 உறுப்பினர்களைக் கொண்ட நடுவர் குழு தேசிய திரைப்பட விருதுக்கான ஆளுமைகளை தேர்வு செய்து பட்டியலை வெளியிட்டது.

தெலுங்கில் வெளியான 'புஷ்பா தி ரைஸ் (பார்ட் 1)' படத்தில் நடித்த அல்லு அர்ஜுனுக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, சிறந்த நடிகைக்கான தேசிய விருது 'கங்குபாய் கதியாவாடி' படத்தில் நடித்த ஆலியா பட் மற்றும் 'மிமி' படத்தில் நடித்த கிருத்தி சனோன் ஆகிய இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ஹிந்தியில் வெளியான 'ராக்கெட்ரி: தி நம்பி எபெக்ட்' படத்துக்கு சிறந்த திரைப் படத்துக்கான தேசிய விருது கிடைத்துள்ளது.

மராத்தி மொழியில் வெளியான 'கோதாவரி' திரைப்படத்தின் இயக்குநர் நிகில் மகாஜனுக்கு சிறந்த இயக்குநருக்கான தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

'மிமி' படத்தில் நடித்த பங்கஜ் திரிபாதி சிறந்த துணை நடிகருக்கான தேசிய விருதையும், 'தி காஷ்மீர் பைல்ஸ்' படத்தில் நடித்த பல்லவி சிறந்த துணை நடிகைக்கான தேசிய விருதையும் தட்டிச் சென்றுள்ளனர்.




விவேக் ரஞ்ஜன் அக்னிகோத்ரி இயக்கிய 'தி காஷ்மீர் பைல்ஸ்' தேசிய ஒருமைப் பாட்டுக்கான நர்கிஸ் தத் விருதுக்கு தேர்வாகியுள்ளது.

'ஆர் ஆர் ஆர்' பன்மொழி பிரிவில் சிறந்த பொழுதுபோக்கு திரைப்படமாக தேர்வாகியுள்ளது. இந்த திரைப்படத்தில் 'நாட்டு நாட்டு' பாடலை பாடிய கால பைரவா சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதையும், ஷ்ரேயா கோஷல் சிறந்த பின்னணி பாடகிக்கான விருதையும் தட்டிச் சென்றுள்ளனர்.

சிறந்த ஹிந்தி படங்களுக்கான வரிசையில், கங்குபாய் கதியாவாடி மற்றும் சர்தார் உத்தம் ஆகிய படங்களுக்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த திரைக் கதைக்கான பிரிவில் 'கங்குபாய் கதியாவாடி' படத்துக்கு விருது கிடைத்துள்ளது. ஷெர்ஷாவுக்கு சிறப்பு ஜூரிக்கான விருது கிடைத்துள்ளது. இந்தியாவின் மிக உயரிய திரைப்பட விருதாக கருதப்படும் தாதாசாகேப் பால்கே விருது பின்னர் அறிவிக்கப்படவுள்ளது.

சிறந்த தமிழ்ப் படத்துக்கான பிரிவில் எம்.மணிகண்டன் இயக்கிய 'கடைசி விவசாயி'க்கும், தெலுங்கில் 'உபென்னா'வுக்கும், கன்னடத்தில் '777 சார்லி'க்கும், மலையாளத்தில் 'ஹோம்' திரைப்படத்துக்கும் தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தாண்டின் பிற்பகுதியில் நடைபெறும் விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருதுகளை வழங்கி கவுரவிக்க உள்ளார்.

### சோலார் பேனல், 6 சக்கரங்கள் உதவியுடன்

# நிலவில் ஆய்வு தொடங்கியது ரோவர்

- **அனைத்தும் திட்டமிட்டபடி நடந்து வருகிறது. கருவிகளின் செயல்பாடு சீராக உள்ளது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.**

**சென்னை**

நிலவில் தரையிறங்கிய சந்திரயான்-3 லேண்டர், ரோவர் கலன்கள் ஆய்வுப் பணிகளை தொடங்கிவிட்டதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

நிலவில் தரையிறங்கி ஆராய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) உருவாக்கிய சந்திரயான்-3 விண்கலம், எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. பல்வேறு கட்டமாக, 41 நாள் பயணத்துக்கு பிறகு, நிலவின் தென்துருவப் பகுதியில் சந்திரயான்-3 விண்கலத்தின் லேண்டர் கலன் நேற்று முன்தினம் மாலை 6.04 மணிக்கு வெற்றிகரமாக தரையிறங்கியது. இதன்மூலம் தென்துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் சாதனையை இந்தியா படைத்தது.

சில மணி நேரங்களுக்கு பிறகு, லேண்டர் கலனில் இருந்த ரோவர் வாகனத்தை பத்திரமாக நிலவில் தரையிறக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது ஏற்பட்ட சில இடர்ப்பாடுகளை சரிசெய்து, நீண்ட போராட்டத்துக்கு பிறகு, நள்ளிரவு 1.30 மணி அளவில் லேண்டரில் இருந்து ரோவர் வாகனம், நிலவின் தரைப்பகுதிக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நிலையில், லேண்டர், ரோவர் கலன்கள் நிலவின் மேற்பரப்பில் ஆய்வுப் பணிகளை தொடங்கியதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ நேற்று வெளியிட்ட அறிவிப்பில், 'அனைத்து செயல்பாடுகளும் திட்டமிட்டபடி நடந்துவருகின்றன. லேண்டர், ரோவர் கலன்களின் இயக்கம், அதில் உள்ள கருவிகளின் செயல்பாடுகள் சீராக உள்ளன. லேண்டரில் உள்ள ராம்பா, இல்சா, சாஸ்டே ஆகிய ஆய்வுக் கருவிகளும் இயங்கத் தொடங்கின. ரோவர் வாகனம் நிலவில் நல்ல முறையில்



நகர்ந்து செல்கிறது. அதேபோல, நிலவின் சுற்றுப்பாதையில் வலம் வரும் உந்துவிசை கலனில் உள்ள ஷேப் எனும் சாதனம் கடந்த 20-ம் தேதி முதல் தனது ஆய்வுப் பணியை செய்துவருகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரோ விஞ்ஞானிகள் சிலர் கூறியதாவது:

லேண்டர் கலன், நிலவில் தரையிறங்கிய இடத்தில் இருந்தபடியும், ரோவர் வாகனம், நிலவின் மேற்பரப்பில் நகர்ந்து சென்றும் ஆய்வு செய்யும். இதற்காக லேண்டரில் 4, ரோவரில் 2 என மொத்தம் 6 வகை கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. லேண்டரில் உள்ள ராம்பா, இல்சா, சாஸ்டே சாதனங்கள் மூலம் நிலவில் மேற்பரப்பு வெப்பம், நில அதிர்வுகள், அயனி கூறுகள் பரிசோதனை செய்யப்படும்.

லேண்டரில் உள்ள நாசாவின் எல்ஆர்ஏ (லேசர் ரெட்ரோ ரிஃப்ளாக்டர் அரே) எனும் கருவி, பிரதிபலிப்பான் தொழில்நுட்பத்தை கொண்டது. அது லேசர் கற்றைகளை பிரதிபலித்து பூமிக்கும், நிலவுக்குமான தூரத்தை துல்லியமாக கணிக்கும்.

ரோவர் வாகனம் தனது 6 சக்கரங்கள், சோலார் பேனல் உதவியுடன் நிலவின் மேற்பரப்பில் விநாடிக்கு ஒரு செ.மீ. வேகத்தில் நகர்கிறது. இது தனது பாதையில் தென்படும் பொருட்களை ஸ்கேன் செய்து, தரவுகளை அனுப்பும். அதில் உள்ள ஏபிஎக்ஸ்எஸ் எனும் கருவி நிலவின் மேற்பரப்பில் லேசர் கற்றைகளை செலுத்தி, அதன்மூலம் வெளியாகும் ஆவியை கொண்டு நிலவின் மணல் தன்மையை ஆய்வு செய்யும். லிப்ஸ் கருவி ஆல்பா கதிர் மூலம் தரைப் பகுதியில் 10 செ.மீ. வரை துளையிட்டு மெக்னீசியம், அலுமினியம் போன்ற தனிமங்களை கண்டறிந்து, தகவல்களை லேண்டருக்கு அனுப்பும்.

ரோவரின் பின்பக்க சக்கரங்களில் அசோக சக்கர சின்னம், இஸ்ரோவின் 'லோகோ' பொறிக்கப்பட்டுள்ளது. நிலவில் ரோவர் ஊர்ந்துசெல்லும் பகுதிகளில் இதன் அச்சு பதியும். நிலவில் காற்று இல்லாததால், இந்த தடம் அழியாது.

லேண்டர், ரோவர் ஆகியவை 14 நாட்கள் வரை ஆய்வு செய்யும். 2 வாரம் முடிந்ததும் நிலாவில் இரவு வந்துவிடும். இரவு நேரத்தில் அங்கு மைனஸ் 200 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை இருக்கும். சோலார் மின் சக்தியை நம்பியுள்ள ரோவர், லேண்டரால் அந்த உறைபனியில் இயங்க முடியாது. 2 வாரங்கள் நீடிக்கும் தொடர் உறைபனியால் அவை செயலிழக்க வாய்ப்பு உள்ளது.

எனினும், அதற்கு முன்பாக லேண்டர், ரோவர் அனுப்ப உள்ள தரவுகள்தான் நிலவை பற்றிய புதிய பரிமாணத்தை வழங்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் இன்று முதல்

# காலை உணவு திட்டம் விரிவாக்கம்

## திருக்குவளையில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்

● சென்னை / நாகப்பட்டினம்

தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் விரிவாக்க திட்டத்தை, திருக்குவளையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி படித்த பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், ஊட்டச் சத்து குறைபாட்டை போக்கவும், கற்றல் இடைநிற்றலை தவிர்க்கவும் அரசுப் பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் அமல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் 110-வது விதியின்கீழ் முதல்வர் ஸ்டாலின் கடந்த ஆண்டு மே 7-ம் தேதி அறிவித்தார். முதலில் இத்திட்டம், சென்னை மாநகராட்சி பள்ளிகள், தொலைதூர கிராமங்களில் உள்ள பள்ளிகளில் தொடங்கப்படும். பின்னர், படிப்படியாக அனைத்து பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்தார்.

அந்த வகையில் முதல் கட்டமாக, சில மாநகராட்சிகள், நகராட்சிகள், தொலைதூர கிராமங்களில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அரசாணையும் வெளியிடப்பட்டது.

கடந்த 2022 செப்.15-ம் தேதி அண்ணா பிறந்தநாளில், மதுரை நெல்பேட்டை ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் காலை உணவு திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

கடந்த மார்ச் 1-ம் தேதி இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதையடுத்து, 417 மாநகராட்சி பள்ளிகளில் 43,681 பேர், 163 நகராட்சி பள்ளிகளில் 17,427 பேர், 728 வட்டாரம் மற்றும் கிராம ஊராட்சி பள்ளிகளில் 42,826 பேர், 237 தொலைதூர, மலைப் பிரதேச பள்ளிகளில் 10,161 பேர் என மொத்தம் 1,545 பள்ளிகளில் 1.14 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த திட்டத்துக்கு தற்போது ரூ.33.56 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்து டாக்கீஸ் + இளமை புதுமை



இத்திட்டத்தை செயல்படுத்த சமூக நலம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களை கொண்ட மாநில, மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

### 16 லட்சம் மாணவர்கள் பயன்

இந்நிலையில், "மாநிலம் முழுவதும் உள்ள 31,008 அரசுப் பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் 16 லட்சம் மாணவர்கள் பயன் பெறுவார்கள். இதற்காக ரூ.404 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது" என்று முதல்வர் ஸ்டாலின் கடந்த 15-ம் தேதி சுதந்திர தின உரையில் அறிவித்தார்.

அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி பயின்ற ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் காலை உணவு விரிவாக்க திட்டத்தை முதல்வர் இன்று காலை தொடங்கி வைத்து, பள்ளிக் குழந்தைகளுடன் உணவு அருந்துகிறார்.

கட்சி பேதமின்றி, அனைத்து எம்.பி.க்கள், எம்எல்ஏக்களும் இன்று இத்திட்டத்தை தொடங்கி வைக்குமாறு முதல்வர் ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன்படி, மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் தங்கள் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் இத்திட்டத்தை தொடங்கி வைக்கின்றனர்.

முதல்வர் ஸ்டாலின் நேற்று சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வந்து, அங்கிருந்து காரில் மயிலாடுதுறை வந்தார். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற முதல்வர், நேற்று இரவு வேளாங்கண்ணியில் தனியார் விடுதியில் தங்கினார்.

காலை உணவு விரிவாக்க திட்டத்தை இன்று தொடங்கி வைத்த பிறகு, ஓய்வு எடுக்கும் முதல்வர், மாலை 4 மணி அளவில் நாகப்பட்டினம் ஆட்சியர் அலுவலகத்தில் சட்டம் - ஒழுங்கு தொடர்பான கூட்டத்தில் பங்கேற்கிறார்.

இதில், திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி., தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய 4 மாவட்ட எஸ்.பி.க்கள், காவல் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

நாளை (ஆக.26) காலை 9 மணி அளவில் நாகப்பட்டினம் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ள ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் பங்கேற்கிறார். இதில், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

நாளை மாலை திருவாரூர் வரும் முதல்வர், சன்னதி தெருவில் உள்ள தங்கள் பூர்வீக இல்லத்தில் தங்குகிறார். ஆக.27-ம் தேதி காலை திருவாரூர் பவித்திரமாணிக்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட் எம்.பி. நாகை செல்வராஜ் இல்ல திருமண விழாவில் பங்கேற்கிறார். பின்னர், காரில் திருச்சி சென்று, விமானம் மூலம் சென்னை திரும்புகிறார்.

### உலக கோப்பை செஸ் போட்டியில் 2-ம் இடம் பிடித்த

# பிரக்ஞானந்தாவுக்கு ஆளுநர், முதல்வர் வாழ்த்து

**சென்னை**

உலகக் கோப்பை செஸ் போட்டியில் 2-ம் இடம் பிடித்த தமிழக விளையாட்டு வீரர் பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

**ஆளுநர் ஆர்.என்.ரவி:** பிரக்ஞானந்தாவின் பிரமிக்கவைக்கும் புத்திக்கூர்மை மிக்க ஆட்டங்களால், ஒவ்வோர் இந்தியரின் இதயத்தையும் வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்திருக்கிறார். பிரக்ஞானந்தா, மறுமலர்ச்சி தன்னம்பிக்கை இந்தியாவின் பிரதிபலிப்பு. தேசம் அவரை நேசிக்கிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** செஸ் உலகக் கோப்பைத் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய, சென்னையின் பெருமையான பிரக்ஞானந்தாவுக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள். உலகத் தரவரிசையில் 2-ம் இடத்தில் உள்ள நகமுரா மற்றும் 3-ம் இடத்தில் உள்ள கேருவனா ஆகியோரை வீழ்த்தி, இறுதிப் போட்டிக்குள் நுழைந்த அவரது பயணம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இறுதி முடிவு என்னவாக இருந்தாலும், அவரது சாதனையுடன் 140 கோடி இந்தியர்களின் இதயங்களும் இணைந்து துடிக்கின்றன. நம் நாடே அதை நினைத்துப் பெருமை கொள்கிறது. பிரக்ஞானந்தா வென்றுள்ள இந்த வெள்ளிப் பதக்கமும், கேண்டிடேட்ஸ் போட்டிக்கு தகுதிப் பெற்றிருப்பதும் இன்னும் பல தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும்.

**பாஜக தலைவர் கே.அண்ணாமலை:** செஸ் உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில் கடுமையாக போட்டியிட்ட நமது செஸ் மேதாவி பிரக்ஞானந்தாவுக்கு எனது வாழ்த்துகள். இந்த சாதனை மாயாஜாலம் அல்ல. அவரது இடைவிடாத விடாமுயற்சியின் வெகுமதி. இதன்மூலம், மதிப்புமிக்க கேண்டிடேட்ஸ் போட்டித் தொடரில் அவர் இடம் பிடித்ததற்காக இந்தியா பெருமை கொள்கிறது.

**பாமக தலைவர் அன்புமணி:** உலகக் கோப்பை செஸ் போட்டியில், சென்னையைச் சேர்ந்த இளம் வீரர் பிரக்ஞானந்தா, உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள மேக்னஸ் கால்சனிடம் வெற்றி வாய்ப்பை இழந்து, 2-வது இடத்தைப் பிடித்துள்ளார். உலகின் முன்னணி வீரரிடம் போராடி அவர் பெற்ற தோல்வி, வெற்றிக்கு இணையானது. அவருக்கு எனது வாழ்த்துகள்.


வாசிப்பு இயக்கம்: நோக்கம் என்ன?
ச.மாடசாமி



உலகக் கோப்பை செஸ்

# சாம்பியன் பட்டம் வென்றார் கார்ல்சன்

பிரக்ஞானந்தாவுக்கு வெள்ளிப் பதக்கம்

# இந்திய சதுரங்கத்தின் புதிய அத்தியாயத்தை தொடங்கும் பிரக்ஞானந்தா

## பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து

உலகக் கோப்பை செஸ் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர், தனது ட்விட்டர் பதிவில், "ஃபிடே உலகக் கோப்பையில் பிரக்ஞானந்தாவின் சிறப்பான ஆட்டத்திற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். அவர், தனது விதிவிலக்கான திறமைகளை வெளிப்படுத்தினார். வலுவான மேக்னஸ் கார்ல்சனுக்கு கடுமையான போட்டியை வழங்கினார். இது சிறிய சாதனையல்ல. வரவிருக்கும் போட்டிகள் அவருக்கு சிறப்பாக அமைய வாழ்த்துகள்" எனத் தெரிவித்துள்ளார்.